

திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் கிழக்கு ஒன்றியத்தில் மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் மனித வள மேலாண்மைதுறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், துணை செயலாளர் பிரபாவதி பெரியசாமி, ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் கே.செல்வராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# போயர் சமுதாய மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



திருச்சி, ஜன.2 -

திருச்சியில் போயர் சமுதாய நலச்சங்கம் முதலாம் ஆண்டு விழா திருச்சி மாவட்ட தலைவர் மாநில ஒப்பந்ததாரர் ரங்கசாமி தலைமையில் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் நகராட்சி நிர்வா கத்துறை அமைச்சர் கே.என். நேரு கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த விழாவில் பேசிய அமைச்சர் கே.என்.நேரு..

போயர் சமுதாயம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதால், அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முன்னேற்றத்திற்காகத் தனி நல வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து சமுதாயத் தலைவர்கள் முதலமைச்சரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்படும். காமராஜர் நகர் பகுதியில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் மக்களுக்கு, தகுதியான இடமாக இருந்தால் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் வீட்டு மனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சமுதாய மக்கள் அரசு ஒப்பந்தப் பணிகளில் (Tenders) ஈடுபடத் தேவையான தகுதிகளைப் பெற்று பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என உறுதி அளித்தார்.

சட்டமன்றத் தேர்தலில் சமுதாய மக்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்து முதலமைச்சரிடம் ஆலோசித்து, வெற்றி வாய்ப்புள்ள இடங்களில் வாய்ப்பு வழங்கக் கோரிக்கை வைக்கப்படும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, குறிப்பாகப் பெரிய கட்டிடங்கள் கட்டுவது, சாலைகள் அமைப்பது மற்றும் விவசாயப் பணிகளில் போயர் சமுதாய மக்களின் உழைப்பு மிக முக்கிய மானது என்று அமைச்சர் நேரு பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் அன்பழகன், முசிறி சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி தியாகராஜன், மத்திய மாவட்டப் பொருளாளர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர் முத்துச் செல்வம் உள்ளிட்ட ஏராளமான போயர் சமுதாய மக்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் முதல் திருப்பட்டூர் வரையிலான, 3 சட்டமன்ற தொகுதிகள்,

# 2 மாவட்டங்கள் வழியாக இயக்கப்பட்ட புதிய பேருந்துக்கு வரவேற்பு!

## நாரணமங்கலம் கிராம பொதுமக்கள் சார்பில் வெடி,வெடித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்!

பெரம்பலூர். ஜன. 2 -

பெரம்பலூரில் இருந்து சிறுவாச்சூர், விஜய கோபாலபுரம், நாரணமங்கலம் வழியாக ஆலத்தூர் கேட், இரூர்,திருவளக்குறிச்சி, பாடாலூர், நெடுங்கூர், மணியாங்குறிச்சி, சனமங்கலம்,வாழையூர் ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையிலும், பெரம்பலூர், திருச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களின் உள்பகுதியிலும் பெரம்பலூர்,லால்குடி,

மண்ணச்சநல்லூர், ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில், பெரம்பலூர் முதல் திருப்பட்டூர் வரை 8A, வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருந்த அரசு டவுன்பஸ் (கிராமப்புறப் பேருந்து) பழைய பேருந்திற்கு பதிலாக புதிய பேருந்து கேட்டு நாரணமங்கலம் கிராம பொதுமக்கள் சார்பிலும், தி.மு.க. கிளைக்கழகங்கள் சார்பிலும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

நாரணமங்கலம் கிராமத்திற்கு புதிய பேருந்து வேண்டும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சிசிவசங்கர் அவர்களிடம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் நேற்று புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சியர் மிருணாளினி, சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன்,

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் டாக்டர் செ.வல்லபன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், போக்குவரத்துத்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் 8A

வழித்தடத்தில் புதிய பேருந்தை துவக்கி வைத்தனர்.

இன்று காலை நாரணமங்கலம் கிராம பொதுமக்கள், இளைஞர்கள் ஒன்றாக சேர்ந்து 8A, புதிய பேருந்தை வரவேற்கும் வகையில் பூஜைகள் செய்து, வெடி,வெடித்து கொண்டாடி, பொதுமக்களுக்கும், பேருந்தில் பயணம் செய்த பயணிகளுக்கும் இனிப்புகள் வழங்கினார்கள்.

மேலும் பேருந்து ஓட்டுநர், நடத்துனர்களுக்கு பொன்னாடை அனிவித்து கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நாரணமங்கலம் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் மாவட்ட வளர்ச்சி, ஒருங்கிணைப்பு,கண்காணிப்பு குழுத்தலைவர்,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தலைமையில் மாவட்ட அளவிலான திட்ட செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் சதீஸ்,மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,திட்ட இயக்குநர் ரூபன் சங்கர் ராஜ்,நலக்குழு உறுப்பினர்கள் பி.எஸ்.சரவணன்,முத்துலட்சுமிசெங்கண்ணன்,ராஜகோபால் மற்றும் அலுவலகர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 70,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்கள் டர்ஃப் கிரிக்கெட் போட்டிகளை, கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. கரூர் காந்திகிராமத்தில் உள்ள, விரூ டர்ஃப் மைதானத்தில் துவக்கி வைத்தார்.

# வருகவே புத்தாண்டு; வாகையே தந்தீண்டு!

ஆங்கிலேயர் உலகாண்ட
அந்தநாள் முதலாக
ஈங்குலகில் பெரும்பாலோர்
எண்ணத்தில் ஏறிவிட்ட
பாங்காக வாழ்க்கையில்
பயன்படுத்தும் ஓர்ஆண்டே
நீங்காமல் செயல்களை
நினைவூட்டும் ஓர்ஆண்டே
ஆங்கிலப் புத்தாண்டாம்
அனைத்திற்கும் வித்தாண்டாம்!

அன்றாடம் விழித்தவுடன்
ஆர்வமாய்ப் பார்க்கின்ற
ஒன்றாகும், இவ்வாண்டின்
ஒவ்வொரு நாளுமே
நன்றான இதழ்போல
நள்ளிரவில் வீழ்ந்துவிடும்!
இன்றுநேற்று நாளையென
எடுத்துரைத்தல்
இதுவேதான்!
நின்றுபல வரலாற்று
நிகழ்வுகளைச் செதுக்கியே
என்றுமே நினைவூட்டும்
இயல்பினதாம் இவ்வாண்டு!

பிறக்கின்ற புத்தாண்டு
பெருமைகள்
வாழ்விலே
சிறக்கின்ற ஆண்டாகத்
திகழுமென வரவேற்போம்!
துறக்கின்ற ஆண்டுபல
தொல்லைகள் தந்தாலும்
பறக்கவிட்டே
யாவையும்
பக்குவமாய்க்
கண்டவெற்றி
மறக்கத்தான் முடியுமா?
மாவிருள் விடியுமா?
திறக்கத்தான்
போகிறது
செவ்வொளி உலகமென,
பிறக்கத்தான்
புத்தாண்டு
பேரொளி எழுகிறது!
உறக்கந்தான்
போதுமென
ஓர்எழுச்சி மேவிடக்
கிறக்கந்தான்
இல்லாமல்
கிழக்கொளி எழுகவென்போம்!

போராட்டம் இல்லாமல்
புதியதோர் ஆண்டுதான்
சீரோட்டம் ஆகவே
திகழுமென்று எண்ணுவோம்;
ஏரோட்டம் வளரவும்
எழிலோட்டம் பொலியவும்
நீரோட்டம் போலவே
நிகழ்வன அமையவும்
ஊரோட்டம் எப்போதும்
உயர்அமைதி ஆகவும்
பாராட்டும் பண்புதான்
பலமடங்கு பெருகவும்
தேரோட்டம் போலவே
தொழில்கள்தாம்
செழிக்கவும்

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

கூரோட்ட அறிவுதான்
குன்றாக உயரவும்
வேரோட்ட மாய்இனிமை
வெள்ளமே பெருகவும்
வீரோட்டச் சாதிமத
வெறிகளோ தீரவும்
ஈரோட்டுக் காஞ்சியின்
இனமான வழியிலே
பேரோட்டம் தமிழ்நாடு
பெரும்பயணம் செய்யவும்
சேரட்டும் யாவரும்;
தேர்தலில் கழகந்தான்
ஊரெங்கும் வெல்லட்டும்
ஒருபுதிய ஆண்டிலே!

புதியதோர் ஆண்டிலே
போர்க்களமாய்த்
தமிழ்நாட்டைச்
சதிசெய்து மாற்றவே
தவிக்கின்றார் சங்கிகள்;
மதியுள்ள தமிழ்நாட்டில்
மாற்றாரின் சூழ்ச்சிகள்
கொதிநெருப்பில்
சாம்பலாகும்;
கொட்டந்தான் ஏங்கலாகும்!

வருகின்ற புத்தாண்டு
வாழ்விலே மகிழ்ச்சியைத்
தருகின்ற ஆண்டாகத்
தளிர்க்கட்டும்,
தழைக்கட்டும்!
தெருவெங்கும் ஊரெங்கும்
சிறிதான வீடெங்கும்
பெருகியே இனிமைதான்
பிறக்கட்டும்,சிறக்கட்டும்;
அருகியே இல்லாமை
அகன்றுதான் போகட்டும்;
கருகிடும் வாழ்விங்கே
காணாமல் ஆகட்டும்!
பெருஞ்சிறப்பாய் நன்மைகள்
பெய்தாளும் தளபதியின்
மருவிலா ஆட்சிதான்
மலரட்டும் மறுபடியும்;
உருளட்டும் எதிர்ப்பவர்கள்;
ஒன்றுமின்றிப் போகட்டும்!
திருவொன்றே வளரட்டும்;
செழிப்பொன்றே
வழங்கட்டும்!
வருகவே புத்தாண்டு;
வளமெலாம் தந்தீண்டு!

தமிழ்மொழி இனம்நாட்டிற்கு
எதிராகத் தலைதூக்கும்
உமிகளைக் காற்றிலே
ஊதுவோம்; எல்லாமே
இமிழ்கடல் நுரைகளாம்;
எப்போதும் கரைவதாம்;
அமிழ்தாகப் பெரியாரின்
அண்ணாவின் கலைஞரின்
தமிழர்நலன் ஓங்கட்டும்;
தன்மானம் பகுத்தறிவு
இமயம்போல் உயரட்டும்;
இளங்கதிர் உதிக்கட்டும்!

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் - முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஜன. 2 -

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று (02/01/2026 - வெள்ளிக்கிழமை) காலை 8 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வருகை தந்து திருச்சி மாவட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் சமத்துவ நடை பயணத்தை துவக்கி வைக்க வருகை தர உள்ளார்கள் . அவரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திருச்சி விமான நிலையம் முதல் குட்செட் மேம்பாலம் வரை உற்சாக வரவேற்பு தர உள்ளோம்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் ,வட்ட, வார்டு,கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணியை சேர்ந்த அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!



சேலம் , ஜன. 2 -

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (02.01.2026- வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட் டக் கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழகத்தால் நியமிக்கப் பட்ட தொகுதிப் பார்வையாளர்கள், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். பொருள்:

1. திராவிடப்பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி நகர இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி அமைப்பாளர் நவீன்குமார் ஏற்பாட்டில் பொள்ளாச்சி வடக்கு (மத்திய) ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் ராசு தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன், நகர கழக பொறுப்பாளர்கள் இரா.நவநீதகிருஷ்ணன் (வடக்கு), எம்.அமுதபாரதி (தெற்கு), நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் முன்னிலையில் வடுகபாளையம் சரவணா ஸ்போர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற YOUTH WING TROPHY கிரிக்கெட் போட்டியை மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார், இதில் மயூரா சுப்பிரமணியம், ஜெயபிரகாஷ், மு.க.முத்து, எஸ்.பி.எம்.பார்த்திபன், செந்தில்குமார், எஸ்.ஜெயக்குமார், ஏ.ஆர்.வி.எஸ்.சந்தலிங்ககுமார், அழகப்பன், ச.தர்மராஜ், மணிமாறன் தென்றல், திருமலைராஜா, நிஷாந்த், அரவிந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர்.